2015 செப்டம்பர் 3]

என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அமைப்பதற்கு உத்தரவிட்ட வாயில்லா ஜீவனையும் வாழவைக்கும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியினை என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட காளப்பன்பட்டி, கல்யாணிப்பட்டி, லிங்கப்பனூர் மற்றும் கொடிக்குளம் பகுதிகளில் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. அந்த மக்களும் நீண்டநாட்களாக, அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனை தேவை என்பதை பல முறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவார்களா என தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமானால், ஏற்கெனவே இருக்கின்ற கால்நடை கிளை நிலையத்திற்கும், கேட்கின்ற கிராமத்திற்கும் மூன்று கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. அதேபோல, 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். 3,000 கால்நடை அலகுகள் என்று சொன்னால், 3,000 கால்நடைகள் அல்ல. ஒரு பசு மாடு ஒரு அலகு; ஒரு எருமை மாடு ஒரு அலகு; 10 ஆடுகள் ஒரு அலகு எனக் கணக்கிடப்படுகிறது. 100 கோழிகள் ஒரு அலகு என்று கணக்கிடப்படும். இப்படி அந்த விதிப்படி 3,000 அலகுகள் இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடங்களிலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று, கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

உள் விளையாட்டரங்கம்

***22236 திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலுள்ள அன்னை சத்யா விளையாட்டு மைதானத்தில் நவீன வசதியுடன்கூடிய உள் விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்பிட்ட கரங்கள் விலகும்முன் வரம் தருகின்ற அன்னையாக, தமிழகத்தின் காவல் தெய்வமாக இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்பதற்கு முன்பாகவே, தஞ்சாவூரில் உள்ள அன்னை சத்யா விளையாட்டு மைதானத்தில் நவீன வசதியுடன்கூடிய உள் விளையாட்டரங்கம் அமைக்க ஆணையிட்டுள்ளார்கள்; கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபகற்பத்தின் தூங்கா விளக்கு, பெண் குலத்தின் பொன் விளக்கு, தமிழகத்தின் ஒளி விளக்கு, ஏழையெளியோரின் கலங்கரை விளக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் ஒரே பாதுகாவலராம் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, தஞ்சாவூர் நகரை, மாநகராட்சி ஆக்கி, இன்றைக்கு சீர்மிகு நகரமாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆட்சிக் காலங்களிலெல்லாம் தஞ்சையை*

தலைநிமிர வைத்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சை தொகுதி, மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

விளையாட்டுத் துறையை விளையாட்டாக எடுத்துக்கொள்ளாமல், "பிள்ளைகளில் யாரும் இளைத்தவர்கள் இல்லை" எனும் தாயின் நோக்கில் அனைத்துத் துறைகளுக்கும் இணையாக, விளையாட்டுத் துறையில் அளவற்ற திட்டங்களை அள்ளி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைக்கின்ற வீரர், வீராங்கனைகளுக்கெல்லாம் பன்மடங்கு உயர்த்தப்பட்ட ரொக்கப் பரிசு, உதவித் தொகை, ஊக்கத் தொகை, விளையாட்டுத் துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள், சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்தி, ஆக்கமும், ஊக்கமும் தந்ததன் விளைவாக தமிழ்நாடு, இந்தியாவிலேயே விளையாட்டுத் துறையில் முதன்மை இடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழ்நிலையில், எனது தொகுதியான தஞ்சாவூரில் உள்ள அன்னை சத்யா விளையாட்டு மைதானத்தில் நவீன வசதிகளுடன்கூடிய உள் விளையாட்டு அரங்கம் ஒன்றினை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்ற வினாவினை இந்த அவையிலே எழுப்புவதற்கு முன்பாகவே, கும்பிட்ட கரம் விலகும் முன்பே வரம் கொடுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவ்விளையாட்டு மைதானத்தில் உள் விளையாட்டு அரங்கத்தை அமைத்துக் கொடுக்க உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. இரா. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும், நாள்தோறும், நாட்டு மக்களுக்கு நலம் பயக்கின்ற வகையில் நல்ல பல திட்டங்களை வள்ளல்

தன்மையோடு வாரி வழங்குகின்ற, வான்மேகம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.

பெரம்பலூர் நகரம், பெரம்பலூர் மாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. அங்கு இருக்கக்கூடிய மாணவர்கள், இளைஞர்களிடம் Roller Skatting விளையாட்டை ஊக்குவிக்கின்ற வகையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.5 இலட்சம், பொதுமக்களுடைய பங்களிப்புத் தொகை ரூ.15 இலட்சம் மூலம், Roller Skatting விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் ரூ.25 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பணிகள் முழுமை பெற போதிய நிதியினை ஒதுக்கித் தருவார்களா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் விளையாட்டுத் துறைக்கென்று பல்வேறு கட்டுமானப் பணிகளைச் செய்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2013-2014 ஆம் நிதியாண்டில் ஏழரை கோடி ரூபாய் செலவின் ஓர் அங்கமாக பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூரில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கு Roller Skatting விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, நிதிப் பற்றாக்குறையின் காரணமாக பாதியில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அந்தப் பணியை விரைவில் முடிப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாளையங்கோட்டை தொகுதியில், சுதந்திரப்

போராட்ட வீரர் வ.உ.சி. அவர்களின் பெயரைத் தாங்கியிருக்கின்ற பூங்காவில், ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கலந்து பேசி, அந்த மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ரூ.50 இலட்சம் நிதி வாங்கி, அந்தப் பணிகள் ரூ.1 கோடி செலவில் துவங்கப்பட்டன. பின்னர், அந்தப் பணிகள் நடைபெறவில்லை என்ற காரணத்தால், இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால், நானும், பாராளுமன்ற ராஜ்ய சபா உறுப்பினர் திரு. தங்கவேலு அவர்களும் ஆளுக்கு ரூ.10 இலட்சம் நிதி தருகிறோம் என்ற தகவலைக் கொடுத்துவிட்டு, இதுபோன்று மற்ற உறுப்பினர்களிடமும் நிதி வாங்கிக் கட்டலாம் அல்லது அரசுத் துறைமூலம் கட்டலாம் என்று சொன்னோம். ஆனால், கட்டி முடிக்கப்பட்டு, இதுவரை திறக்கப்படாமல் இருக்கிறது. எனவே, எப்போது உள் விளையாட்டு அரங்கம் திறக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 8 ஆம் தேதியன்று அந்த இடத்தை பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோடு ஆய்வு செய்தபோது, இன்னும் பல்வேறு நிலைகளில் வேலைகள் நிறைவுபெறாமல் இருப்பது தெரிய வந்தது. எனவே, அந்தப் பணிகள் நிறைவுபெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரத்தால் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.